THE COVAI MAIL
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER
RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.
Covai | Chennai | Tirupur | Ooty | Coonoor | Kothagiri | Pollachi | Palani
Vol No. : 10 Issue No. : 22 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, Aug 27 - Sep 2, 2023, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

SREE Annapoorna SREE Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேடரிங்

## AIMS holds its 34th Annual Management Education Convention 2023

# "We exist for a bigger reason than just profit"

**- Jairam Varadaraj,** Managing Director, Elgi Equipments Ltd.

✍ Madhumitha.R, THE COVAI MAIL

The Association of Indian Management Schools (AIMS) successfully hosted its 34th Management Education Convention at the PSG Institute of Management (PSGIM) and PSG Convention Centre from August 24 to 26, 2023. The convention's theme was "Management Education: Harnessing the New Paradigm."

The event commenced with two pre-convention workshops on the first day, focusing on 'International Accreditation: An Overview' and 'Case Teaching,' featuring 6 resource persons.

The Inaugural Ceremony took place at the PSG Convention Center, with R. Nandagopal, President, AIMS & Director General, STC, and Prof. J Philip, Founder President AIMS & Chairman XI E, delivering opening remarks. T G Sitharam, Chairman, AICTE, graced the occasion as the Chief Guest. A K Bhattacharya, Editorial Director of Business Standard, delivered the Keynote address.

> "Central-level enabling legislation is crucial for the conversion of PGDM institutions into universities" Prof. J Philip

Sri Vidhya, Convention Director and Director of PSG Institute of Management briefed the convention and also said that PSGIM was proud to be associated with this event. The subsequent Panel discussion centered on 'The Transformational Journey' with participation of AV Varadharajan, Chairman, AVV Group, Coimbatore.

The second day saw three-panel discussions, engaging 12 resource persons, exploring diverse topics such as Aspirations, Adaptability, Emerging Subjects, and a session on 'Be Smart.'

The final day featured a Panel discussion on the theme of 'Accountability' with 5 resource persons, followed by the Valedictory session. Jairam Varadaraj, Managing Director of Elgi Equipments Ltd., delivered the valedictory address and was honoured with the esteemed 'Ravi J. Mattai Award' by AIMS for his exceptional contribution to Management education and practice.

In a symbolic transition, Nandagopal, the outgoing President, handed over the reins to Sudhir Sharma, the Incoming President of AIMS and Chairman of the Master School of Management who also delivered the acceptance speech.


Researchers, past Presidents, representatives of member institutions and faculty members and students of Management schools participated in the event.



*Jairam Varadaraj, Managing Director, Elgi Equipments Ltd receives the prestigious 'Ravi J. Mattai Award' by AIMS*

## Shaping Management Education

**R. Nandagopal,** President, AIMS




He acknowledged the visionary leadership of AICTE's Chairman, Sitharam and his dedication to elevating management education. He highlighted the Chairman's keen interest in addressing challenges faced by PGDM institutions in the context of the new education policy.

Highlighting India's global leadership in business education, Nandagopal stated, "India has the largest business schools in the world, with over 4000 institutions and the highest admission capacity."

He also emphasized the pivotal role of AICTE-approved PGDM institutions, noting, "PGDM institutions play a very great role in the development of managerial manpower in this country."

## NEP Impact

**Prof. J Philip,** Founder President, AIMS



"AIMS notably provides a platform for business schools in India, bringing together institutions that were previously isolated. In March 1988, we initiated this endeavour, overcoming doubts and receiving solid support from colleagues", he emphasized.

In his address, Prof. Philip said, "The 2020 NEP's marginalization of management education is concerning" and delved into the critical implications of the New Education Policy (NEP) and raised concerns about its impact on leading institutions.

Expressing unease over the move to reshape specialized institutions like IITs, IIMs, and medical schools into broad-spectrum universities, he questioned the wisdom behind altering institutions that have positioned India as a global educational force.

Prof. Philip highlighted the push for multidisciplinary universities as a significant element of the NEP. He questioned the feasibility and merit of converting every institution into a multidisciplinary university, including management schools and PGDM institutions.

According to Prof. Philip, "The strength of PGDM schools lies in their focused approach, and I am concerned that dilution might hinder their constructive impact."

One crucial issue Prof. Philip raised pertained to the conversion of PGDM institutions into universities. He emphasized the need for central-level enabling legislation to facilitate this transformation.

He stated, "It is 3 years and two months since the Kasturirangan Report's release, but there is no enabling legislation. We must not regress to outdated university models with sprawling campuses and numerous disciplines."

## AI and Innovation: Navigating India's Future

**- T G Sitharam,** Chairman, AICTE



In his address, Chief Guest Sitharam's insights shed light on the dynamic interplay between AI, innovation, and India's trajectory. Commending India's successful lunar journey, he highlighted the cost-effectiveness of India's lunar mission at 615 crores, and juxtaposed it with the market capitalization surge of Chandrayaan-related companies, illustrating the synergy between space exploration and business growth.

"AI is not a distant concept; it's seamlessly woven into our daily lives," he emphasized, underscoring AI's presence through generative AI tools. He stressed the need to embrace AI while preserving human values, as it is predicted to generate around 97 million new jobs in the coming years.

He hailed AICTE's commitment to innovation through hackathons and initiatives nurturing entrepreneurship and creativity. He underscored that the students have created more than 5 thousand innovations in hackathons conducted by the All India Council of Technology.

He praised AICTE's commendable efforts to provide technical textbooks in regional languages, enhancing accessibility and knowledge dissemination.

Lauding the National Education Policy (NEP) 2020's emphasis on inclusive education, vocational training, and lifelong learning, he remarked, "AI democratizes education, transcending geographical boundaries."


In his closing remarks, the Chief Guest envisioned India's ascent as a global leader through AI-driven education, innovative practices, and skill enhancement. He encouraged the incorporation of universal human value courses to nurture holistic professionals, resonating with India's ethos.



*The Chief Guest T G Sitharam, Chairman AICTE released the Research Books on Management Education with R. Nandagopal, President, AIMS and other dignitaries.*

## Adapting to New Educational Paradigms

**- A K Bhattacharya,** Editorial Director of Business Standard



Bhattacharya emphasized that the COVID-19 pandemic swiftly altered the education landscape, compelling a global shift to online classes. This change challenged traditional classroom norms and led to a complete transformation in educational delivery.

Concerning technology's impact, he highlighted how the integration of AI and machine learning into education by younger generations has fundamentally transformed learning and communication.

Regarding government influence, Bhattacharya noted that post-pandemic, governments have heightened involvement across sectors, including education. This prompts educational institutions to swiftly adapt and align with evolving governmental priorities and regulations.

Discussing alternative education centers, he stressed, "The emergence of alternatives to traditional education calls for business schools to rethink their value proposition. Customized programs that resonate with evolving student preferences and cater to emerging career aspirations are essential."

Bhattacharya emphasized the importance of hybrid learning models that blend physical and virtual classrooms for inclusivity and accessibility, especially as online education gains traction.

On technology's integration, he questioned, "How do educators effectively integrate technology into pedagogy without diluting the essence of education? The challenge lies in ensuring technology enhances learning and knowledge ownership, especially as AI gains prominence."

## Balancing Profit, Purpose, and Risk

**- Jairam Varadaraj,** Managing Director, Elgi Equipments Ltd.



Jairam Varadaraj expressed gratitude for recognition and delved into business purposes. He traced the shift from shareholder value maximization to a holistic approach, questioning if it truly improved the world. He stressed that GDP alone isn't a true measure of progress; equity matters. Applying this to business, he urged them to value stakeholders like customers, employees, and society.

He conveyed how his own organization values employee welfare by treating them fairly and not relying on cheap labour. This commitment to people translates into better products and services, ultimately benefiting both the organization and its stakeholders.

He emphasized aligning actions with conscience, promoting equitable practices, and fostering trust. He introduced the "tension triangle," balancing purpose, profit, and risk. He shared examples of employee trust and purpose-driven policies.

He urged creating a present for future pride, paralleling India's space achievements. He concluded with a frog-in-a-well anecdote, highlighting the need for self-initiated progress.

# ஹெல்த்கேர் ஐகான் விருது



புது டெல்லியில் எக்கனாமிக் டைம்ஸ் சார்பில் 'ஹெல்த் கேர் லீடர்ஸ் உச்சி மாநாடு 2023' வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் 'ஹெல்த்கேர் ஐகான்' என்ற விருது கே.ஜி.மருத்துவமனையின் தலைவர் கே.ஜி.பக்தவத்சலத்திற்கு வழங்கப்பட்டது.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் ஓணம் கொண்டாட்டம்



கோவை, துடியலூர் அருகே வட்டமலைபாளையத்திலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் ஓணம் கொண்டாட்டம் நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் உமா குத்துவிளக்கு ஏற்றி விழா நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். இதில் மாணவ,மாணவியர் கேரள முறையிலான பாரம்பரிய உடையணிந்து கல்லூரிக்கு வந்தனர். மேலும், கல்லூரி வளாகத்தில் அத்தப்பூகோலம் வரைந்து மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்றனர். பின்னர் மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றதையடுத்து, கேரள முறையிலான இனிப்புக்கள் வழங்கப்பட்டன.

# அனுமதிக்கப்பட்ட நேரத்தை மீறி மது பான பார்கள் செயல்பட்டால் லைசன்ஸ் ரத்து

✍ தி கோவை மெயில்

கோவை மாவட்ட காவல் கட்டுப்பாட்டில் இருந்த துடியலூர் காவல் நிலையம் மற்றும் வடவள்ளி காவல் நிலையங்களை கோவை மாநகர காவல் துறையுடன் இணைக்கப்பட்டது. இதனை அடுத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பத்ரி நாராயணன், மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணனிடம் கோப்புகளை ஒப்படைத்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன், துடியலூர் மற்றும் வடவள்ளி காவல் நிலையங்களில் சட்டம் ஒழுங்கு பணிகளை இன்றையிலிருந்து மாநகர போலிசார் மேற்கொள்வார்கள். பெண்கள் மற்றும் குழந்தைகள் சம்பந்தபட்ட புகார்கள் மத்திய, மேற்கு பெண்கள் காவல் நிலையங்களில் வழக்கு பதியப்படும். போக்குவரத்து தொடர்பான பணிகளையும் மாநகர காவல்துறை மேற்கொள்வதோடு விபத்துகள் தொடர்பான புலன் விசாரணை விசாரிக்கப்படும் என்றார்.

அதே போல கல்லூரி வளாகம் அதிகம் இருப்பதால் போதை வஸ்துகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு தனியார் மதுபான கூடங்கள் அனுமதிக்கப்பட்ட நேரத்தை மீறி செயல்பட்டால் லைசன்ஸ் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதனைத் தொடர்ந்து பேசிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பத்ரி நாராயணன், சூலூர் காவல் நிலையத்தை இரண்டாக பிரித்து நீலம்பூர் காவல் நிலையம் என புதிதாக தொடங்க பரிந்துரை கேட்டுள்ளதாக தெரிவித்தார்.



மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பத்ரி நாராயணன், மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணனிடம் கோப்புகளை ஒப்படைக்கிறார்.








# தாக்குப் பிடிப்பார்களா ஓபிஎஸ் - டிடிவி?



✍ சாணக்கியன், தி கோவை மெயில்

மதுரையில் அ.தி.மு.க., பிரம்மாண்ட மாநாடு நடத்தியுள்ள நிலையில், முக்குலத்தோர் (கள்ள, மறவர், அகமுடையார்) வாக்கு வங்கி மீண்டும் திரும்பி வருமா என்ற விவாதம் துவங்கியுள்ளது. எம்.ஜி.ஆர் காலம் முதல் அ.தி.மு.க., வை தங்களது சொந்த கட்சியாக (சொத்தாக) இவர்களை உணர்ந்து வந்ததால் தென்மாவட்டங்கள் அ.தி.மு.க., வின் கோட்டையாக விளங்கியது.

ஜெயலலிதா காலத்தில் ஒருபடி மேலாக டெல்டா, சென்னை, கோவை போன்ற மாவட்டங்களில் இடம்பெயர்ந்துள்ள இவர்களை வாக்குகளும் அ.தி.மு.க., விற்கு சாதகமானது. சு.திருநாவுக்கரசர், கருப்பசாமி பாண்டியன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் அ.தி.மு.க., வில் இருந்து நீக்கப்பட்டபோதும்கூட முக்குலத்தோர் வாக்குகளில் சேதாரம் ஏற்படவில்லை. அ.தி.மு.க., வின் நிழல் அதிகாரமையமாக வி.கே.சசிகலா தொடர்ந்தது தான் அதற்குக் காரணம். ஜெயலலிதா மறைவுக்குப்பின், அ.தி.மு.க., மீதான முக்குலத்தோர் பார்வையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

அ.தி.மு.க., வின் ஒற்றைத் தலைமையாக, பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி தலைதூக்கியப் பின்னர் கொங்கு மண்டலம், வடமண்டல கட்சியாக அ.தி.மு.க., சுருங்கிவிட்டதாகத் தொடர்ந்து விமர்சனம் எழுந்து வருகின்றன.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலும், தென்மாவட்ட தொண்டர்களும் தனது தலைமையைத் தான் இப்போதும் உறுதியாக ஏற்கின்றனர் என்பதை நிரூபிக்கும் வகையில் அ.தி.மு.க., வின் வீரவரலாற்று பொன் விழா மாநாட்டை வெற்றிகரமாக எடப்பாடி பழனிசாமி நடத்திக்காட்டியுள்ளார்.

தென்மாவட்டங்களை சேர்ந்த எத்தனையோ முக்குலத்தோர் அமைப்புகளின் எதிர்ப்புகளையும் மீறி லட்சக்கணக்கான தொண்டர்களின் மாநாடு நிறைவு பெற்றுள்ள நிலையில் மீண்டும் இவர்களின் வாக்குகள் அ.தி.மு.க., வுக்கு நிச்சயம் திரும்பும் என்ற நம்பிக்கை தென்மாவட்ட, டெல்டா மாவட்ட நிர்வாகிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இருந்தாலும், தேர்தல் முடிவுகளை வைத்துத்தான் இவர்களின் வாக்குகள் யாருக்கு என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். ஓ.பன்னீர்செல்வம் டி.டி.வி.தினகரன் தனித்தனி இயக்கங்களாக இருந்தாலும் அரசியல் நிகழ்வுகளிலும், தேர்தலிலும் ஒன்றாகப் பயணித்து வருகின்றனர். எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் டெல்டா மற்றும் தென்மாவட்டங்களில் உள்ள தஞ்சாவூர், பெரம்பலூர், நாகை, மயிலாடுதுறை, திருச்சி, திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம், தென்காசி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய 14 தொகுதிகளில் தங்களது செல்வாக்கை எப்படியாவது காட்டிவிட வேண்டும் என்ற இலக்குடன் ஓபிஎஸ் டிடிவி பயணிக்கின்றனர்.

2024இல் தங்களது செல்வாக்கை நிரூபித்தால் மட்டுமே 2026 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் தாங்கள் அரசியல் சக்தியாக நிற்க முடியும் என்பது ஓபிஎஸ் தினகரனின் கணக்கு. டெல்டா மாவட்டங்களில் மட்டுமே இவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கும் தி.மு.க, 2019க்குப் பின்னர் தென்மாவட்டங்களிலும் முக்குலத்தோர் வாக்குகளைக் குறிவைத்துக் காய்நகர்த்தி வருகிறது.

நிதி, மின்சாரத்துறை தங்கம் தென்னரசு, ஊரக வளர்ச்சி ஐ.பெரியசாமி, வணிகவரி, பத்திரப்பதிவுத்துறை மூர்த்தி, பள்ளிக் கல்வித்துறை அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில்துறை டி.ஆர்.பி.ராஜா என இந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வலுவான அமைச்சர் பதவிகளை வழங்கியுள்ளது. அ.தி.மு.க., வில் அதிருப்தி அடைந்த இவர்களது வாக்கு வங்கியைத் தன்வசப்படுத்த வேண்டும் என்பதில் திமுகவும் பல்வேறு அசைவுகளைச் செய்து வருகிறது. இவர்களைப் பொருத்தவரை எப்போதுமே அதிகார மையத்திலிருந்து அரசியல் செய்வதையே விரும்புவார்கள்.

அ.தி.மு.க., வில் முடிவெடுக்கும் அதிகார மையம் கைநழுவிய நிலையில் இரண்டாம் கட்டத் தலைவர்களை ஆதரித்து வாய்ப்பு வரும்போது பார்த்துக்கொள்ளலாம் எனச் சொந்தக் கட்சியாகக் கருதும் அ.தி.மு.க., வையே முக்குலத்தோர் தொடர்ந்து ஆதரிக்கப் போகிறார்களா, தங்களது அரசியல் செல்வாக்கை நிரூபிக்கும் வகையில் ஓபிஎஸ் டிடிவியை ஆதரித்து தங்களது வாக்கு வங்கி வலிமையை காட்டப்போகிறார்களா அல்லது இரண்டாம் கட்ட அதிகார மையம் கிடைத்திருப்பதால் திமுகவை ஆதரித்து ஓரளவு அதிகாரத்துடன் வலம் வரலாம் என நினைக்கிறார்களா என்பது போக போகத்தான் தெரியும். பூனைக்குத் தலையாக இருக்கப் போகிறார்களா அல்லது புலிக்கு வாலாக இருக்க விரும்புகிறார்களா என்பதற்கான விடை மக்களவைத்தேர்தலில் கிடைத்துவிடும்.

### காலம் முடிவு செய்யும்

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, "தமிழகத்தில் அரசியல் விழிப்புணர்வு மிகுந்த சமுதாயம் முக்குலத்தோர். 1952 முதல் பொதுத் தேர்தல் முதல் அரசியல் அதிகாரத்தைச் சுவைத்தவர்கள் இவர்கள். தொடக்கத்தில் காமராஜருடன் பயணித்தனர்.

1973 திண்டுக்கல் மக்களவை இடைத்தேர்தலில் மாயத்தேவரை வெற்றி பெறச் செய்து எம்.ஜி.ஆரை அரசியல் உச்சத்துக்குக் கொண்டு சென்றனர். அத்தேர்தலில் ஆளும்கட்சியான தி.மு.க.,வுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்தனர்.

2024 மக்களவை தேர்தலில் இவர்கள் என்ன முடிவு எடுக்கப் போகின்றனர் என்பதைப் பொறுத்துத் தான் டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் அ.தி.மு.க., பா.ஜ.க வெற்றி வாய்ப்பு தெரியவரும். இந்தத் தேர்தல் முடிவு தமிழக அரசியல் வரலாற்றில் திருப்புமுனையாக மாறும் வாய்ப்பு உள்ளது," என்றார் அவர்.

# நிலவில் தடம் பதித்த இந்தியா

✍ **ஆசிரியர்,** தி கோவை மெயில்

இந்த ஆகஸ்ட் மாதம் 23ஆம் தேதி என்பது இந்திய நாட்டின் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பொன்னான நாளாக போற்றப்படுகிறது. நவீன அறிவியலின் சாதனைகளில் ஒன்றாக இந்தியா தனது விண்கலத்தை நிலவுக்கு அனுப்பி அங்குள்ள தென்துருவத்தில் தடம் பதித்த முதல் நாடு என்ற மாறாத பெருமையைப் பெற்றிருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலாவில் பாட்டி வடை சுட்டுக் கொண்டிருப்பதாகக் கதைகள் சொல்லிக் கொண்டு, நிலவை பற்றிய கவிதைகள் எழுதிக் கொண்டு, பொருளாதார வளர்ச்சியிலும், சமூக வளர்ச்சியிலும் நவீன அறிவியலிலும் பின்தங்கியிருப்பதாகக் கருதப்பட்ட இந்தியச் சமூகம் இன்று தலைநிமிர்ந்து நின்று புதிய சரித்திர சாதனை படைத்துள்ளது. இது சாதாரணமான ஒன்று அல்ல. சரித்திர சாதனையான சந்திராயன் : 3 வெற்றிப் பயணத்தை உலக நாடுகள் எல்லாம் வியந்து பாராட்டி வருகின்றன. இந்த சாதனை வெற்றி என்பது சும்மா வந்து விடவில்லை.

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல ஆயிரம் விஞ் ஞானிகளும், தொழில்நுட்ப பணியாளர்களும் இணைந்து அர்ப்பணிப்புடனும் பல அவமானங்களைச் சகித்துக் கொண்டும் செய்த பணிகளுக்கான, முயற்சிக்கான பலன்தான் இந்த சந்திராயன் மூன்றின் வெற்றியாகும். அமெரிக்கா, ரஷ்யா, சீனா என்ற மூன்று நாடுகளுக்குப் பிறகு நிலவை ஆய்வு செய்யும் விண்வெளி ஆய்வுத்துறையில் வெற்றி கண்ட நாடாக இந்தியா தன்னை மாற்றிக் கொண்டுள்ளது. பல்வேறு வசதி குறைபாடுகளோடு, இருக்கின்ற கருவிகளையும், வசதிகளையும் வைத்துக்கொண்டு நமது இந்திய விஞ்ஞானிகள் இதனைச் சாதித்துக் காட்டி இருக்கிறார்கள். குறிப்பாக இது சந்திராயன் : 2 தோல்விக்குப் பிறகு கிடைத்த மிகப்பெரும் வெற்றியாகும்.

முதன் முதலில் ரஷ்யாவின் லூனா விண்கலத்தின் பயணங்களும், அமெரிக்காவின் ஆர்டிமிஸ் விண்கலத்தின் பயணங்களும் நடைபெற்ற பொழுதும், ஆர்ம்ஸ்ட்ராங், ஆல்டிரின் நிலவில் கால் பதித்த போதும், இந்தியா இந்த விண்வெளி துறை சார்ந்த வரைபடத்திலேயே இல்லை. ஆனால் 1990களில் தொடங்கிய நிலவு சார்ந்த ஆய்வுகள் இன்று நம்மை சாதிக்க வைத்திருக்கின்றன. பொதுவாக நிலா சார்ந்த ஆய்வுகள் பிளைபி, ஆர்பிட்டர், இம்பேக்ட் மிஷன், லேண்டர், ரோவர், மனிதர்களை நிலவுக்கு அனுப்புவது என்று ஆறு வகைப்படும்.



முதல் வகையான ஃபிளைபி என்பது நிலவுக்கு அருகில் விண்கலத்தை செலுத்துவது. ஆனால் அதன் சுற்றுப்பாதைக்குள் நுழையாமலேயே ஆய்வு நடத்துவது ஆகும். ரஷ்யாவின் லூனா:3, அமெரிக்காவின் பயனீர் 3, 4 ஆகியவை இதற்கான எடுத்துக் காட்டுகள் ஆகும். இரண்டாவதாக நிலவின் சுற்றுப்பாதைக்குள் நுழைந்து அதன் மேற்பரப்பு மற்றும் சுற்றியுள்ள பொருட்களைப் பற்றி ஆய்வு நடத்துவதாகும். நமது சந்திராயன் : ஒன் இது போன்ற ஒரு திட்டமாகும்.

மூன்றாவதாக சுற்றுப்பாதைத் திட்டங்களின் நீட்சியாக சில ஆய்வக கருவிகள் நிலவின் பரப்பிற்கு அனுப்பப் படுவதாகும். நான்காவதாக ஒரு விண்கலம் நிலவில் தடம் பதித்து பத்திரமாக தரையிறங்குவதாகும். முதல் 11 முயற்சிகள் தோல்வியில் முடிந்த பிறகு தான் 1966 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் லூனா 9 விண்கலம் நிலவில் முதன்முதலாக கால் பதிக்க முடிந்தது. ஐந்தாவது வகை என்பது நிலவில் தரையிறங்கும் விண்கலத்தில் இருந்து சிறு ஆய்வு வாகனங்கள் வெளியே வந்து ஆய்வு செய்வதாகும். ஆறாவதாக நிலவில் மனிதர்கள் கால் பதிப்பது, 1969ல் முதன்முதலாக அமெரிக்கா இந்த சாதனையை செய்து காட்டியது.

இவ்வளவு கடினமான நிலவு சார்பான ஆய்வுகளில் இன்று இந்தியா சந்திராயன் : ஒன்று மூலம் நுழைந்தது. சந்திராயன் இரண்டு என்பது இதே போல லேண்டர் மிஷனாக தரையிறங்கும் பொழுது தொடர்பு அறுந்து போய் அந்த திட்டம் தோல்வியடைந்தது. ஆனால் அதிலிருந்து உற்சாகத்துடன் மீண்டெழுந்து இன்று சந்திராயன் : மூன்று மூலமாக இந்தியா நிலவில் தடம் பதித்து இருக்கிறது. அதுவும் அதன் தென்துருவத்தில் கால் பதித்திருக்கிறது. உலகமே வியந்து பார்த்துப் பாராட்டும் வகையில் 23.8.2023 அன்று மாலை சுமார் ஆறு மணியளவில் நமது விண்கலம் நிலவில் கால் பதித்தது. சிறிது நேரம் கழித்து அதிலிருந்து வெளிவந்த ரோவர் தனது ஆய்வுப் பணிகளைத் தொடங்கி இருக்கிறது.

> **பெருமை தரும் நிகழ்வு என்பதோடு வரும் காலங்களில் விண்வெளி சார்ந்த பொருளாதாரத் திட்டங்களில் இந்தியாவுக்கு பெரும் வாய்ப்புகள் உருவாவதற்கு முன்னோடியாகவும் இந்த வெற்றி பார்க்கப்படுகிறது.**

உலக அரங்கில் இது மிகவும் பெருமை தரும் நிகழ்வு என்பதோடு வரும் காலங்களில் விண்வெளி சார்ந்த பொருளாதாரத் திட்டங்களில் இந்தியாவுக்கு பெரும் வாய்ப்புகள் உருவாவதற்கு முன்னோடியாகவும் இந்த வெற்றி பார்க்கப்படுகிறது. ஒப்பீட்டு அளவில் நமது விண்வெளி ஆய்வு பயணம், அதன் வெற்றி ஆகியவை மிகக்குறைந்த பொருளாதார செலவில் இயக்கப்படுபவை ஆகும்.

அந்த வகையில் பல வளர்ந்த நாடுகளும், வளரும் நாடுகளும் இந்த துறை சார்ந்த பணிகளுக்காக இந்தியாவுடன் இணைந்து செயல்பட ஆர்வமாக உள்ளன. இந்தியப் பிரதமர் மோடி சொன்னது போல, இந்த சந்திராயன் : மூன்று விண்வெளித்திட்டத்தின் வெற்றி என்பது தனிப்பட்ட இந்தியாவின் வெற்றி அல்ல, உலகம் முழுவதும் முழுமைக்கும், மனித குலத்துக்கே உரித்தானதாகக் கிடைத்த வெற்றி ஆகும்.

எனவே நிலவின் தென்துருவத்தில் கால் பதித்த முதல் நாடு என்பது ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமை தரும் நிகழ்வாகும். இந்த பெருமைமிகு சாதனையைப் படைத்த ஆய்வு விஞ்ஞானிகள், தொழில்நுட்ப பணியாளர்கள், இதில் தொடர்புடைய அனைவருக்கும் ஒவ்வொரு இந்தியனின் தலை தாழ்ந்த வணக்கங்கள்!



## ஈச்சனாரி விநாயகர் கோவில் மஹா கும்பாபிஷேகம்



கோவை ஈச்சனாரி விநாயகர் கோவிலில் மஹா கும்பாபிஷேகம் வெகு விமர் சையாக புதன்கிழமை நடைபெற்றது. இதில் இந்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு, மாவட்ட ஆட்சியர் கிரந்தி குமார், மேயர் கல்பனா, கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா.கார்த்திக் மற்றும் பெரும் திரளான பக்தர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## இம்மாத இறுதியில் இரவு வானத்தைப் பார்க்க மிஸ் பண்ணீடாதீங்க..!



தி கோவை மெயில்

இந்த மாத இறுதியில் 'ப்ளூ மூன் டே' வருகிறது. அப்படி என்றால் என்ன?

அழகிய நிலவைப் பிடிக்காதவர்கள் யாரும் இல்லை. அழகுக்கு உவமையாகக் கூறப்படும் ஒரு துணைக்கோள் நிலா. பவுர்ணமி நாளில் பூமிக்கு மிக அருகில் முழுமையாகத் தெரியும் நிலாவை விரும்பி பார்ப்பவர்கள் பலர். இந்த நாளில் மொட்டை மாடிகளிலும், மைதானம் போன்ற இடங்களிலும் நிலாச்சோறு சாப்பிடும் வழக்கம் இன்றளவில் நம் மக்களிடம் உள்ளது.

**ப்ளூ மூன் - டே**

பொதுவாக ஒரு மாதத்தில் இரண்டு பௌர்ணமிகள் வரும்போது, இரண்டாவது பௌர்ணமி அன்று தான் இந்த 'ப்ளூ மூன்' தெரியும். இந்த நாளில் நிலா பூமிக்கு மிக அருகில் இருக்கும். இந்நாளில் பூமியைச் சுற்றியுள்ள சந்திரனின் சுற்றுப்பாதை சுமார் 5 டிகிரி கோணத்தில் சாய்ந்துள்ளது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதன் மூலமாக வழக்கமான பவுர்ணமி நாட்களை விட நிலாவை பெரிதாகவும், துல்லியமாகவும், கவர்ந்து இழுக்கும் நிறத்திலும் பார்க்க முடியும். இந்த 'ப்ளூ மூன்' வரும் 30ம் தேதி தெரியவுள்ளது.

அன்று இரவு பிரம்மாண்டமாகத் தோன்ற உள்ள நிலாவை பார்ப்பதற்கு அனைவரும் தயாராக இருங்கள்.

# பொறாமை, எரிச்சல் வராமல் இருக்க என்ன வழி?

தி கோவை மெயில்

பொறாமை, பேராசை, எரிச்சல், கோபம் இவையெல்லாம் மனிதர்களுக்கு ஏன் வருகிறது? இந்த உணர்ச்சிகளை எல்லாம் உருவாக்காமல் இருப்பது ஒருவருக்கு சாத்தியமா? இந்த உணர்வுகள் நம்மை பீடிக்காமல் ஆனந்தமான நிலையில் வாழ்வை அனுபவிப்பதற்கு ஒருவர் பெறவேண்டிய புரிதல் என்ன என்பதையெல்லாம் ஆராய்கிறது சத்குருவின் இந்த உரை!

சத்குரு: பொறாமை என்றால் உங்களுக்குப் பிடித்த, ஆனால் உங்களிடம் இல்லாத ஒரு பொருள் மற்றவரிடம் இருக்கும்போது ஏற்படும் உணர்வு. உங்களிடம் இருப்பதைவிட அதிகமாக மற்றொருவரிடம் இருக்கும்போது ஏற்படுவது அல்லது உங்களுக்குள் இருக்கும் ஒருவித குறைபாட்டினால், இன்னொருவரைப் பார்த்தால் தன்னைப் பற்றிய போதாமை உணர்வு மேலோங்குவதுதான் பொறாமை அல்லது எரிச்சல்.

நீங்கள் ஆனந்தமான உணர்வில் இருந்தால் யாரையும் பார்த்து பொறாமைப்பட மாட்டீர்கள். உங்களை விட இன்னொருவரிடம் ஏதோ ஒன்று அதிகம் உள்ளது போலவும் நீங்கள் ஏதோ ஒருவிதத்தில் குறைந்தவர் போலவும் உணர்வதால்தான் இந்த பொறாமை உணர்வு வருகிறது. உங்களைவிட உயர்ந்தவர் ஒருவர் இருக்கும் இடத்தில்தான் உங்களிடம் பொறாமை இருக்கும். இங்கு நீங்கள் மட்டும் இருந்தால் உங்களுக்கு பொறாமை உணர்வு இருக்காது.


நல்ல குணம் பொருந்தியவராக இருக்க வேண்டும் என்ற தூண்டுதல் இருப்பதால் இப்புவியில் சில விஷயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் அறிவுபூர்வமாக இருக்க வேண்டும் என்ற தூண்டுதல் எப்போதும் இல்லை. நல்ல மனிதனாக இருக்க வேண்டும் என்றே எப்போதும் இந்த சமூகம் ஊக்குவிக்கிறது. ஆனால் ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தம்மை நல்லவன் என்று நம்பிக்கொண்டிருப்பவருடன் வாழ்வது மிகவும் கடினம். அவர் நல்லவர்தான், ஆனால் கடினமான மனநிலையுடன் இருப்பார். நல்லகுணம் இருக்க வேண்டும் என்ற எண்ணம்தான் பரிதாபம், அனுதாபம் போன்ற தேவையற்ற விஷயங்களை மனிதனிடம் ஊக்குவிக்கின்றது. உங்களால் முடிந்தால் அடுத்தவருக்கு அன்பு ஒன்றையே அர்ப்பணியுங்கள். அப்படி முடியாவிட்டால் அடுத்தவரை சிறிது கண்ணியத்துடனாவது நடத்துங்கள். அதுவே மிகச் சிறந்தது.

இந்த ஒரு மணி நேரமாக நீங்கள் என்னுடன் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள், நான் உங்கள் மீது மிகவும் அனுதாபத்துடன் இருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியவந்தால், அதை விரும்புவீர்களா? ஒருவர் எத்தனைதான் ஏழையாக இருந்தாலும், எத்தனைதான் ஆதரவற்றவராக இருந்தாலும், அவர் இதை ஏற்றுக்கொள்வாரா? ஏற்றுக்கொள்ள மாட்டார். ஒருவன் பசியில் மற்றவரிடம் பிச்சை எடுப்பது வேறு விஷயம். நமது மனத்தில் பரிதாபம், அனுதாபம் போன்ற உணர்வுகளுக்கு இடம் கொடுத்திருப்பதால் தான் அதன் எதிர்மறை குணங்களான எரிச்சலும் பொறாமையும் கூடவே நிகழ்கிறது. அந்த ஒன்று இல்லையென்றால் இதுவும் இல்லாமல் இருக்கும். இந்த எரிச்சல் மற்றும் பொறாமை இருப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், அது மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய நிலையல்ல. எவன் ஒருவன் மகிழ்ச்சி அற்ற நிலையை தனக்குள் உருவாக்குகிறானோ அவன் அறிவற்ற மனிதனாகவே இருப்பான்.

இந்த உலகில் உண்மையில் விவேகம்தான் தேவைப்படுகிறது. விவேகமுள்ளவர்கள் தான் தேவை, நல்ல மனிதர்கள் அல்ல. ஆனால் இந்த சமுதாயத்தில் குழந்தை பிறந்ததிலிருந்து, நல்லவனாக இரு என்றே சொல்லி வளர்க்கிறோம். விவேகத்துடன் இரு என்று அவனுக்கு சொல்லித் தருவதில்லை. எப்பொழுதும் நல்லதைப் பற்றி பேசுகிறோம். அப்படியென்றால், அடிப்படையில் படைத்தவன் ஏதோ தவறு செய்திருப்பதைப் போலவும் நாம் அதை சரி செய்ய முனைவதாகவும் நம்புகிறோம். படைத்தவன் தவறு செய்திருந்தால், நிச்சயமாக உங்களால் சரி செய்ய முடியாது. அந்த அளவு அறிவாவது உங்களுக்கு இருக்க வேண்டும். படைத்தவன் குழப்பம் செய்திருந்தால், நீங்களும் அந்த குழப்பத்திலிருந்துதான் வந்தவர் என்பதால் உங்களால் ஒன்றும் சரி செய்ய முடியாது.

ஏதோ ஒன்று சரியாக வேலை செய்யவில்லை என்றால், நாம் சரியான செயல் செய்யவில்லை என்ற புரிதல் வேண்டும், அவ்வளவுதான்! மக்கள் இந்தளவுக்கு புரிந்துகொண்டால், அவர்கள் வாழ்க்கையில் பல விஷயங்கள் எளிதாக நடக்கும். என் வாழ்வில் ஏதோ சரியாக நடக்கவில்லை என்றால் நிச்சயமாக நான் சரியான செயல் செய்யவில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அடிப்படையைப் புரிந்து உள்வாங்கிக் கொண்டால், எல்லோருக்கும் தேவையான வழிகள் பிறக்கும்.

**நமது மனத்தில் பரிதாபம், அனுதாபம் போன்ற உணர்வுகளுக்கு இடம் கொடுத்திருப்பதால் தான் அதன் எதிர்மறை குணங்களான எரிச்சலும் பொறாமையும் கூடவே நிகழ்கிறது. அந்த ஒன்று இல்லையென்றால் இதுவும் இல்லாமல் இருக்கும். இந்த எரிச்சல் மற்றும் பொறாமை இருப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், அது மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய நிலையல்ல. எவன் ஒருவன் மகிழ்ச்சி அற்ற நிலையை தனக்குள் உருவாக்குகிறானோ அவன் அறிவற்ற மனிதனாகவே இருப்பான்.**



### என்.ஜி.பி. கல்லூரியில்
## சர்வதேச உணவு ஊக்குவிப்பு நடவடிக்கைகள்

தி கோவை மெயில்

என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின், உணவு அறிவியல், ஊட்டச்சத்து துறை மற்றும் உணவு விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் (இந்தியா), இணைந்து 9வது சர்வதேச உணவு மாநாட்டின் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஸ்ரீ.ஜி.சி.பி ரங்காராவ் நினைவு விரிவுரை செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், கோவை என்.ஜி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயலாளர் தவமணி டி பழனிசாமி, கோவை நிஸ்வின் ஃபுட்ஸ் நிர்வாக இயக்குநர் ராம்குட்டி, முன்னாள் துணைவேந்தர் ஷீலா ராமச்சந்திரன், சார்பு அதிபர் அமித்யா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், உணவு விஞ் ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் AFST (I) பற்றிய அறிமுகம் குறித்தும் மைசூருவில் 2023 சர்வதேச உணவு மாநாட்டில் நடைபெற உள்ள நிகழ்வுகள் மற்றும் மாநாடு குறித்தும் பங்கேற்பாளர்களுக்கு தஞ் சாவூர் உணவுப் பொருள் மேம்பாட்டுத் துறை (NIFTEM) பேராசிரியர் ஜெகன் மோகன் மற்றும் ஏஎஃப்எஸ்டி (ஐ) செயலர் சுரேஷ் டி சகாரே விளக்கினர்.

இதைத் தொடர்ந்து, கோவை நிஸ்வின் ஃபுட்ஸ் நிர்வாக இயக்குநர் ராம்குட்டி, "உணவு பதப்படுத்தும் தொழில்கள் மற்றும் உணவுப் பொதியிடலின் வணிக அம்சங்கள்" என்ற தலைப்பில் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்த அமர்வை ஈரோடு பண்ணாரி அம்மன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியின் வேளாண் பொறியியல் துறை இணைப் பேராசிரியரும் தலைவருமான செல்லதுரை தொடர்ந்தார். அங்கு அவர் 3டி பிரிண்டிங் போன்ற உணவுத் தொழில்களில் பயன்படுத்தப்படும் சமீபத்திய பேக்கேஜிங் தொழில்நுட்பங்களைப் பட்டியலிட்டார்.

கோவை, நிஸ்வின் ஃபுட்ஸ் இயக்குநர் நிஷாந்த் ராம்குட்டி, கேள்வி பதில் நிகழ்ச்சியைத் தொடர்ந்து பங்கேற்பாளர்களுடன் தனது நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொண்டார். ஏஎஃப்எஸ்டி (ஐ) பொருளாளர் தானாஜி நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

இந்நிகழ்வில், என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பி.எஸ்.ஜி கலைக் கல்லூரி மற்றும் அறிவியல், பி.எஸ்.ஜி.ஆர் கிருஷ்ணம்மாள் கல்லூரி, ஆர்.வி.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் ஈரோடு (வேளாளர் மகளிர் கல்லூரி மற்றும் பண்ணாரி அம்மன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி) என பல்வேறு கல்லூரிகளிலிருந்து 250 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## இந்துஸ்தான் கல்லூரியில் பேரவைத் துவக்க விழா

தி கோவை மெயில்

இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணினி அறிவியல் துறையின் பேரவைத் துவக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இப்பேரவையின் அமர்வை சென்னை ஜி டெக் சொல்யூஷன்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கோபிநாத் மற்றும் கோவை குரோப்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் அமைப்பின் இயக்குநர் பிரதீபா சௌந்தரராஜன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் கணினி அறிவியல் துறைத்தலைவர் மற்றும் பேராசிரியர் ரங்கராஜ் சிறப்புரை வழங்கிப் பேரவையின் பொறுப்பாளர்களை அறிமுகப்படுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் கோபிநாத் மற்றும் பிரதீபா சௌந்தரராஜன் டிஜிட்டல் உலகில் சமீபத்திய தொழில்நுட்பங்கள் மூலம் மாணவர்களுக்கு அறிவூட்டும் வகையை குறித்தும், மாணவர்களின் மாற்றத்திற்கு தொழில்நுட்பத்தில் எவ்வாறு கவனம் செலுத்திட வேண்டும் என்பதைக் குறித்தும் தமது உரையில் எடுத்துரைத்தனர். இதில் துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### இந்துஸ்தான் கல்லூரியில்
## தேசிய அளவிலான பயிலரங்கு

தி கோவை மெயில்

இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் கேட்டரிங் மற்றும் ஹோட்டல் மேனேஜ்மென்ட் துறை சார்பில் கலினரி பிளேட் பிரசன்டேசன் நுணுக்கங்கள் குறித்து தேசிய அளவிலான ஒரு நாள் பயிலரங்கு செவ்வாய்கிழமை நடந்தது.

சிறப்பு விருந்தினராக ஊட்டி ஐ.டி.சி ஹோட்டல் உறுப்பினர் மற்றும் பார்ச்சூன் சுல்லிவன் கோர்ட்டின் கிச்சன் எக்ஸிகியூட்டிவ் ஜெய்கணேஷ், சென்னை ரேடிசன் ப்ளூ மற்றும் ஜிஆர்டியில் செஃப் டி பார்ட்டி பிரசாந்த் ராதாகிருஷ்ணன் ஆகியோர் மாணவர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.

பல்வேறு விதங்களில் உணவு முறை பரிமாறுதல் (பிளேட் பிரசன்டேசன்) குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைந்த இந்த பயிலரங்கு மாணவர்களுக்கு நட்சத்திர ஹோட்டல்களில் வேலை வாய்ப்பு பெற உதவியாக அமைந்தது.

கேரளா, கர்நாடகா மற்றும் கோவை போன்ற பல்வேறு இடங்களிலிருந்து 60க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, துறைத்தலைவர் பிரேம்கண்ணா, ஒருங்கிணைப்பாளர் செஃப் செபாஸ்டின் ஷால்வின் மற்றும் துறைப் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.



இந்துஸ்தான் கல்லூரியில் தேசிய அளவிலான பயிலரங்கில் சென்னை ரேடிசன் ப்ளூ ஜிஆர்டியில் செஃப் டி பார்ட்டி பிரசாந்த் ராதாகிருஷ்ணன் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் காட்சி

## சந்திராயன் வெற்றியை கொண்டாடிய நேரு கல்வி குழுமம்

தி கோவை மெயில்

நேரு கல்வி குழுமம் சார்பில் சந்திராயன் 3 நிலவின் தென்துருவத்தில் தரை இறங்கும் நிகழ்வினை நேரடி காட்சியாக ஒளிபரப்பும் நிகழ்வு கோவை, திருமலையாம்பாளையம், நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி திரையரங்கு வளாகத்தில் நடந்தது.

இதில் நேரு குழும நிறுவனங்களின் முதன்மை செயல் அதிகாரியும், செயலாளருமான கிருஷ்ணகுமார் மற்றும் கல்லூரி முதல்வர் அனிருதன் ஆகியோர், சந்திராயன் 3 நிலவில் வெற்றிகரமாகத் தரை இறங்கியதும், ராக்கெட் வடிவிலான கேக்கை வெட்டி மாணவ மாணவிகளுடன் கொண்டாடினர்.




நேரு குழும நிறுவனங்களின் முதன்மை செயல் அதிகாரியான கிருஷ்ணகுமார் மற்றும் கல்லூரி முதல்வர் அனிருதன் ஆகியோர் மாணவர்களுடன் சந்திராயன் 3 சாதனையைக் கொண்டாடினர்.

### துப்பாக்கி சுடுதல் போட்டியில்
## கே.பி.ஆர் கல்லூரி மாணவி சாதனை



மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமாரை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார் மாணவி ஆர்த்தி.

தி கோவை மெயில்

கேரளாவின் திருவனந்தபுரத்தில் 14 வது தென்மண்டல துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதில் கே.பி.ஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் மாணவி ஆர்த்தி, 50 மீட்டர் ஜூனியர் பெண்கள் தனிநபர் பிரிவில் ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலம் வென்று சாதனை படைத்துள்ளார்.

முன்னதாக மாணவி ஆர்த்தி, மதுரை ரைஃபிள் கிளப் நடத்திய 48வது தமிழ்நாடு துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டியில் குழு மற்றும் தனிநபர் என இரண்டு பிரிவுகளிலும் சேர்த்து 4 தங்கம், 1 வெள்ளி, மற்றும் 3 வெண்கலம் உட்பட 8 பதக்கங்களை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.வெற்றி பெற்ற மாணவி ஆர்த்திக்கு கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார், கே.பி.ஆர் கல்வி குழுமத்தின் தலைவர் ராமசாமி மற்றும் கல்லூரி முதல்வர் இராமசாமி ஆகியோர் பாராட்டினர்.

# கே.பி.ஆர் கல்வி நிறுவனம் சார்பில்
# புதிய கட்டிடத் திறப்பு விழா



தி கோவை மெயில்

கே.பி.ஆர் கல்வி நிறுவனங்களின் சார்பில் கலை கல்லூரியின் புதிய கட்டிடம் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கான புதிய மாணவர் விடுதி கட்டிடம் திறப்பு விழா திங்கட்கிழமை நடைப்பெற்றது.

இந்நிகழ்விற்கு கே.பி.ஆர் கல்விக்குழுமங்களின் தலைவர் ராமசாமி தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக அன்னபூர்ணா ஹோட்டல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சீனிவாசன் மற்றும் ஜி.ஆர்.ஜி கல்வி நிறுவனங்களின் தலைவர் நந்தினி ஆகியோர் கலந்துகொண்டு புதிய மாணவர்கள் விடுதியையும், புதிய கலை கல்லூரி கட்டிட வளாகத்தையும் திறந்து வைத்தனர்.


புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கல்லூரிக் கட்டிடம் நவீன தொழிற் நுட்பங்களுடன் கூடிய அனைத்து வசதிகளையும் கொண்டு 4.5 இலட்சம் சதுர அடிகளில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் நூறு வகுப்பறைகள், பத்து கணினி ஆய்வகங்கள், இரண்டு ஆடை மற்றும் வடிவமைப்பு ஆய்வகங்கள், இரு கலையரங்குகள், 12 கலந்தாலோசனைக் கூடங்கள், இரு கருத்தரங்க அறை, ஒரு மின் மற்றும் புத்தக நூலகம், நான்கு ஆலோசனைக் கூடங்கள், 2000 பேர் அமரக்கூடிய காட்சிக்கூடம், உணவருந்தும் அறை, சுகாதார மையம், காணொளி பதிவரங்கு, இசைப்பயிற்சி அரங்கு, இன்குபேசன் சென்டர், சிற்றுண்டியகம், முதலியவை அமைந்திருக்கின்றன.

அதனைத் தொடர்ந்து மாணவர் விடுதி வளாகத்தில் ஆயிரம் மாணவர்கள் தங்குவதற்கு தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய விடுதி அறைகளும், குளிர்சாதன வசதி கொண்ட அறைகளும், வெளிநாட்டு மாணவர்கள் தங்குவதற்கு தேவையான விடுதி அறைகளும் கட்டப்பட்டுள்ளது. இத்திறப்பு விழாவில் கே.பி.ஆர் குழுமத்தின் மேலாண்மை இயக்குநர்கள், நிர்வாக இயக்குநர்கள், இரு கல்லூரிகளையும் சார்ந்த கல்லூரி முதல்வர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், நிர்வாக அலுவலர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கே.பி.ஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் புதிய மாணவர் விடுதியை அன்னபூர்ணா ஹோட்டல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சீனிவாசன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார், அருகில் கே.பி.ஆர் கல்விக் குழுமங்களின் தலைவர் கே.பி.ராமசாமி, கே.பி.ஆர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் நிர்வாக இயக்குநர் சிகாமணி மற்றும் பி.எஸ்.ஜி.ஆர் கல்வி குழுமங்களின் நிர்வாக அறங்காவலர் ரங்கசாமி ஆகியோர்.

## ராஜமாருதி அலங்காரத்தில் ஆஞ்சநேயர்



கோவை பீளமேடு பகுதியில் அமைந்துள்ள அஷ்டாம்ச வரத ஆஞ்சநேயர் கோவிலில் சனிக்கிழமை ஆஞ்சநேயருக்கு ராஜமாருதி அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அஷ்டாம்ச வரத ஆஞ்சநேயரை தரிசித்தனர்.

## பாகுபாட்டுக்கு இடம் தரக் கூடாது

மேற்கு மண்டல ஐ.ஜி பவானீஸ்வரி பேச்சு



மாணவர்களிடம் ராகிங் தடுப்பு விழிப்புணர்வு குறித்து உரையாற்றுகிறார் மேற்கு மண்டல ஐ.ஜி பவானீஸ்வரி.

தி கோவை மெயில்

சமீபகாலமாக ஜாதி ரீதியான பாகுபாட்டைப் பள்ளி, கல்லூரிகளில் புகுத்தும் முயற்சி நடக்கிறது என்றும் இத்தகைய முயற்சிகளுக்கு மாணவர்கள் இடம் தராமல் இலக்கை நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும் என்றும் பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ராகிங் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மேற்கு மண்டல ஐ.ஜி பவானீஸ்வரி பேசினார்.

கோவை பிஎஸ்ஜி கல்லூரியில் ராக்கிங் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவிற்குக் கல்லூரி முதல்வர் பிருந்தா தலைமை வகித்தார், காட்சித் தொடர்பியல் துறைத் தலைவர்கள் ராதா, ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக மேற்கு மண்டல ஐ.ஜி பவானீஸ்வரி கலந்துகொண்டு, பேசுகையில் வாழ்நாளில் அனைவருக்கும் சிறந்த காலமாக இருப்பது கல்லூரி காலம் தான். அந்த காலகட்டத்தில் ராகிங் மாதிரியான சட்ட விரோத நடவடிக்கைகளில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது. தன்னம்பிக்கை இல்லாத மாணவர்கள் தான், ராகிங் போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

ராகிங் போன்ற செயல்களுக்கு எதிராக மாணவர்கள் தைரியமாகக் காவலர்களை அணுகி, புகார் அளிக்கலாம். இத்தகைய புகார்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, கோவை காவலர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சமீபகாலமாக, ஜாதி ரீதியான பாகுபாட்டைப் பள்ளி, கல்லூரிகளில் புகுத்தும் முயற்சி நடக்கிறது. இத்தகைய முயற்சிகளுக்கு மாணவர்கள் இடம்தராமல், மாணவர்கள் தங்களின் இலக்கு நோக்கி முன்னேறிச் செல்ல வேண்டும்., என்றார்.

தொடர்ந்து கல்லூரி முதல்வர் பிருந்தா பேசுகையில் ”கல்வி நிலையம் என்பது கோயில் போன்றது. அங்கு எப்போதும் அமைதியான சூழல்தான் நிலவ வேண்டும். கடந்த பல ஆண்டுகளாக ராகிங் இல்லாத கல்லூரியாக பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி திகழ்கிறது.”என்றார்.

சோடியன் எனர்ஜி நிறுவனம் சார்பில்
## சோடியம் பேட்டரிகள் விரைவில் அறிமுகம்

தி கோவை மெயில்

சோடியம் அயன் பேட்டரிகள் (நான் அயன் பேட்டரிகள்) உற்பத்தியில் முன்னோடியாக திகழும் சோடியன் எனர்ஜி நிறுவனமும், பாரம்பரிய வாகனங்களை மின்சார வாகனங்களாக மாற்ற புதுமையான தொழில்நுட்பங்களை வழங்கி வரும் ஏஆர்4 டெக் நிறுவனத்துடன் இணைந்து இந்திய சந்தையில் சோடியம் அயன் பேட்டரிகளை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

